உ
பதிவு எண் — M 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர்: இளவழகனார்.

கிளை—8 குருகுலம், மாம்பாக்கம்; மன்மத: தை, உஅ 10—2—56 தளிர்—16

29 FEB 1956
1135
1-56

திருக்குறள் பிழிவு:

## அடிப்படைத் தேவை

மக்கள் வாழ்க்கைக்கு அடிப்படைத்தேவை உணவு உடை நிழல் என்கின்றனர்; முதல் முயற்சியை அவற்றிற்காக மேற்கொள்கின்றனர்; பொதுமக்களும் அவ்வாறே செய்கின்றனர்; கற்ற பெருமக்கள் என்பாரும் அவ்வாறே செய்ய முற்படுகின்றனர்.

ஆனால், திருவள்ளுவரைப் போன்ற சான்றோர் முடிபு இதற்கு வேறாயிருக்கிறது; 'அறிவு மெய்யறிவு என்பனவே வாழ்க்கைக்கு முக்கியமாய்த் தேவை; அறிவைப் பெருக்கிவிட்டால், மக்கள் தாமாகவே தமக்கு வேண்டியவற்றைத் தேடிக் கொள்வர்; மெய்யறிவு பெருகினால், வாழ்க்கை இனிமையும் பயனும் உற இடர்ப்பாடின்றி நடக்கும்: ஆதலால், அறிந்த பெருமக்கள் நாட்டுக்குச் செய்ய வேண்டிய முதற்கடமை, அறிவு மெய்யறிவுத் தொண்டுகளே' என்பது; பொருட்பால் தொடக்கத்தில் திருவள்ளுவர் கல்வியறிவை வைத்தும், அறத்துப்பால் அடிப்படையில் மெய்யறிவை நிறுத்தியும் தம் கொள்கையை நிறுவுகின்றார்.

புயல் வெள்ளம் போன்ற இடர்ப்பாட்டு நேரங்களில் உணவு உடை நிழல் மருந்து முதலியன உடனே கவனிக்கத் தக்கவை யாயினும், எப்போதும் அல்ல; நாட்டின் ஆக்கப் பணிகளில் (நிர்மாணத் தொண்டுகளில்) தலைப்படுகின்றபோது, அறிவு மெய்யறிவுகளின் தொண்டுகட்கே முக்கிய ஊக்கமும் பெரும் பொருளும் கூட்ட வேண்டும் என்பது முன்னாசிரியர் கருத்து. 'நன்னடை நல்கல் வேந்தற்குக் கடன்' என்பது அவர்கள் தீர்மானம்.

# "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

8-ம் ஆண்டுக் கையொப்பம்
(28-10-55 முதல்)

| | | | | |
|---|---|---|---|---|
| உள்நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | ரூ. | 0 | 1 | 0 |
| ஆயுள்— | | | | |
| கையொப்பம் | ரூ. | 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்;
மதுராந்தகம் P. O.
(தென்னிந்தியா)


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா"
—புறநானூறு.


| கிளை | மன்மத, | தளிர் |
|---|---|---|
| 8 | 10-2-56 | 16 |


## அன்பின் பிழம்பு

மனத்தர்:

மனிதர் மனத்தால் வளர்ச்சி யடைதற் குரியவர்; மனிதர், மனம்படைத்தவர்! நமது வாழ்வும் வளர்ச்சியும் மனத்தைக் கொண்டே நடைபெற இருக்கின்றது.

ஆனால், இக்காலம், வேறு கருவியினால் வேலை செய்கிற காலமாக இருக்கிறது; இது வளர்ச்சிக்குரிய காலமா? முன்பெல்லாம் 'செந்நாப் புலவர் என்று கூறுவர் அறிஞரை! மனத்தின் சிறப்பை நாவன்மையால் தெரிவிப்பார்கள்; இன்றோ, 'செம்பேனாப் புலவரே' எங்கும் மலிந்திருக்கின்றனர். எண்ணங்களை எழுதியே வெளிப்படுத்துகிறார்கள். எதற்கும் கருவி தேவைப்படுகிறது; கருவி வன்மைக்குக் கட்டுண்டு கிடத்தலே நாகரிக வாழ்வு போலும்!

இப்படிச் சொல்லுவதால், கருவிகளே வேண்டாம் என்பது கருத்தன்று; மனத்தால் செய்யக் கூடியவைகளை மறந்துவிடக் கூடாது.

மன உயர்வு:

மனம் கீழேயும் இழுக்கும், மேலேயும் கொண்டு செல்லும். அது புலன்கள் வழியாக இறங்கி உலகப் பொருள்களிலும் படியும்; மேல் நோக்கிச் சென்றால், நினைத்தல் கொண்டு, ஆர்வம் ஓங்கி நட்பிற் சிறந்து காதல் பெருகி அன்பில் உயர்ந்து அருளில் திகழலாம்.

நாம் மேலேதான் உயர்ந்து வளர்கிறோம். குறுக்கே வளர்வதில்லை. அதிலும், மனம் தலையிலேதான் அமைந்திருக்கிறது. அப்படி இருக்க, மனத்தைப் புலன்களின் வழியாக ஏனோ கீழே செலுத்தல் வேண்டும்?

நமக்கு மனம் ஒன்றை நினைக்கும். புத்தி அதைத் துணியும். அகங்காரம் செயலுக்கு ஊக்கங் கொள்ளும். அகங்காரம் நல்ல கருவிதான்; ஆனால், தீமையிலே செலுத்தக் கூடாது; நோக்கம், உயர்ந்தவைகளுக்குத்தான்.

இச்சை, செயல், அறிவு என்னும் ஆற்றல்கள் பருமையிலே வேலை செய்ய உதவும். இச்சை, செயல், அறிவு என்பன, மனம், அகங்காரம், புத்திகளால் நிகழும்.

மனம்முதலியவற்றின் (ஆன்ம தத்துவம்) வல்லமைகள் கலைச் சிறப்பால் (வித்தியா தத்துவங்களால்) உயரும்! உயர்ந்து, தூய்மைச் சிறப்பால் (சுத்த தத்துவங்களால்) மேலும் சிறந்து திகழும். மனித வாழ்வு ஓங்க உலக நிலைகள் கலைச் சிறப்பால் ஓங்கித் தூய்மையில் விளங்க வேண்டும்.

முப் பொருள்:

உலகும் அதன் சுருங்கிய வடிவமாய உடலும் (அண்டமும் பிண்டமும்) உயிரல்லாதன; அவை, உயிர், உயிரின் அறிவில் பொருந்தியுள்ள உட்பொருள் என்ற இரண்டுடன் சேர முப்பொருள்களாகின்றன; உலகம், பாசம், மலம் எல்லாம் ஒரு பொருளை உணர்த்துவன, அறியாமை உடையவை; அதனால், ஆற்றல் குறைந்தவை. உயிர்கள் சிறிது அறிவுடையன; அதனால், சற்று ஆற்றல் மிகுந்தவை.

உயிர் அறிவுடைமையால் உலகத்தைக் கட்டிப் பிடித்து ஆளுகிறது. அஃதின்மையால் உலகம் கட்டுண்டு கிடக்கிறது.

ஆதலால், திருக்குறளுக்குச் சூரியனையாவது ஒப்புமை சொல்லலாமா என்றால், இக் குணத்தைக் கொண்டு ஒக்கும் எனக் கொள்ளத் தகும்.

ஆனால், திருவள்ளுவர் நீக்கும் உள்ளத்திருள், வேறு எதனாலும் அவ்வளவு எளிதில் நீக்கக் கூடியதன்று; சூரியன் நீக்குவது புற இருளையே;

மேலும், திருக்குறள் மாந்தர் உள்ளத்தை மலர வைத்து அதனால் அவ்வுள்ளத்துள்ள இருளைத் தள்ளுகின்றது; இருள் மறுபடியும் சேர்வதற்கு வழியில்லை; சூரியன் அப்படிச் செய்வதில்லை. சூரியன் தாமரையை மலர்விப்பதற்கும் உலகத்தின் புறவிருள் நீங்குதற்கும் ஒரு தொடர்பு மில்லை; அதனால் மீண்டும் மீண்டும் இருள் பரவுகின்றது. திருக்குறள், நிலையாகவே மாந்தர் அகத்திருளை நீக்கிக் குணப்படுத்துகின்றது.

—குலபதி நாயனார்

மாந்தர்க்குப் பற்பல சீர் திருத்தங்களைப் பற்பலர் பற்பல வகையாகச் செய்ய முந்துகின்றனர்; அந்த ஊக்கம் போற்றுதற்குரியதே. ஆயினும், அவற்றைத் தக்கபடி செய்வது, செய்வார்க்கும் செய்யப் பெறுவார்க்கும் எளிமையும் விரைந்த பெரும் பயனுமாய் இருக்கும்.

மேற்புறமான திருத்தங்களைவிட அடிப்படையான திருத்தங்களே முக்கியமாகவும் முதலிலும் கவனிக்கத் தக்கவை. வாழ்க்கையில் உண்டாகும் நிலைகுலைவுகட்கெல்லாம் காரணம், மாந்தர் மன அழுக்கு



அறம் முதலிய நான்கையும் அவர் மிக வல்லமையாய் விரித்து விளக்கியிருக்கின்றார்; இவ்விளக்கம் உலகியலோடு ஒத்துச் செல்கின்றது; வடிவத்தால் சுருக்கமாகவும், அறிய அறியக் கருத்தால் விரிவாகவும் உள்ளது; உலகோர் எந்நிலையில் உள்ளோரும் எளிதாக ஓதுதற்குரியர்; இனிய எளிய மிகப் பழைய தமிழ் மொழியால் உரைக்கப் பெற்றது; சிந்திப்பார் சிந்திக்கக் கூடிய கருத்துக்களெல்லாம், உற்று ஆராய்வார்க்கு விளங்கக் கூடியது; தன்மை வகையாலும் பயன் வகையாலும் உண்மை மொழிகளென்று பாராட்டக் கூடியது. இப்படி மிகு வல்லமையாய் எல்லார்க்கும் உண்மைக்கும் இயையத் திருக்குறள் மறை இயற்றப்பட்டது.

ஆதலால், வள்ளுவர் வாய்மொழியில், உலகச் சிந்தனையாளர் சிந்திப்பனவெல்லாம் ஒருங்கே அமைந்துள்ளன என்று பெரியோர் பாராட்டி வருகின்றனர்.

—செயலூர்க் கொடுஞ் செங்கண்ணனார்

ஆரியமும் தமிழும் பழைய மரபுகள், பழைய நாகரிகங்கள், பழைய மொழிகள்! இவற்றில், இது இதைவிட மேலானது என்று தூக்கிச் சொல்லுவது எளிதன்று. ஏனென்றால், இவ்விரண்டிலும் சிறந்த நூல்கள் வழிகாட்டியாக உள்ளன. ஆரியத்தில் வேத நூல்கள் நன்கு பாதுகாக்கப்பட்டு வருகின்றன; தமிழ்க்குத் திருவள்ளுவர் அருளிய திருக்குறள் ஒன்றே சிறப்புக்குப் போதும்.

—வண்ணக்கஞ் சாத்தனார்

திருக்குறள் உலகப் பொதுவேதம். மக்கட் பிறப்பில் வந்த ஒருவர், அவர் எவராயினும், அந்த இருவரிக் குறளின் முப்பாலைப் பயின்று அதில் வரும் அறம் முதலிய நான்கினையும் அறிந்துகொண்டால் அதுவே போதும்; வேறு அறியவேண்டும் என்பது இல்லை. அரிய வேதங்கள் என்று பாராட்டப்பெறுகின்ற இருக்கு யசுர் சாமம் அதர்வணம் பாரதம் என்னும் ஐந்தின் கருத்துக்களும் அவற்றின் வழிப்பட்ட அறுவகைச் சமயங்களின் கொள்கைகளும் எல்லாம் நம் திருவள்ளுவர் உலகுக்கு அறிவுரையாக மொழிந்த திருக்குறள் உண்மைகளில் அடங்கிக்கிடக்கின்றன.

—களத்தூர் கிழார்

சிறந்த நூல்கள், இலக்கண அழகுகள் பொருந்தியிருக்கும். நல்ல நூலுக்கு எழுத்திலக்கணம் சொல்லிலக்கணம் பொருளிலக்கணம் என்னும் மூவகை இலக்கணங்களும் வேண்டும்.

ஆனால், உலக மொழிகளில், தமிழல்லாத மற்ற மொழிகளுக்குப் பொருளிலக்கண அமைதியே இல்லை. தமிழ்மொழி ஒன்றிலேதான் பொருளிலக்கணம் உள்ளது; அதுவும், எழுத்து சொல் இலக்கணங்களைவிடப் பொருளிலக்கணமே மிகவும் முக்கியமாகவும் இன்றியமையாததாகவும் கருதப்படுகின்றது; விரிவாகவும் விளக்கப்படுகின்றது; எல்லாத் தமிழ் நூல்களுக்கும் அடிப்படையாகவும் திகழ்கின்றது!

ஆகவே, பொருளிலக்கண அடிப்படை அமையாத ஏனை மொழிகளின் நூல்களுக்கு இலக்கணப்



தாய் இருக்கின்றது; வையத்து வாழ்வார்கள் அக இருளாகிய அறியாமை தீமை முதலிய திணிந்த இருட்டை நீக்கி அறிவு மெய்யுணர்வு என்னும் அருளொளியை எங்கும் நிலவ வைக்கும் திருவிளக்காய்த் திகழ்கின்றது!

அறத்துப்பால் அகலாகவும், பொருட்பால் பெரிய திரியாகவும், இன்பப்பால் தலை சிறந்த நெய்யாகவும், செவ்விய சொற்கள் ஒளிப் பிழம்பாகவும் குறட் பா தண்டாகவுங் கொண்டு உலகத்தோர் உள்ளிருள் நீங்கத் திருவள்ளுவர் திருக்குறள் விளக்கு ஏற்றினர்.

வையத்து வாழ்வோர் அனைவர்க்கும் இது பொது; இரண்டாயிரம் ஆண்டுகளாக இது, நிலையாய் ஒளி வழங்கி வருகின்றது.

—நப்பாலத்தனார்

உலகத்தில் நாம் காணும் பேரொளிப் பொருள் ஞாயிறு! இரண்டு அரிய செயல்களை உலகுக்கு அது செய்து வருகின்றது. ஒன்று, தாமரையை மலரவைக்கின்றது; மற்றொன்று, உலகத்தில் இருளைப் போக்குகின்றது. தாமரை ஓர் உயிர்; ஆகவே, உயிரையும் மலரச் செய்து, உயிரற்ற பொருள்களையும் இருள் நீக்கி விளக்குகின்றது, சூரியன்!

திருவள்ளுவர் அருளிச்செய்த வெள்ளைக் குறட்பா என்னும்குறள் வெண்பாவும்,ஞாயிற்றைப் போலவேமக்களுடையஇதய மலர்களை மலரச் செய்து பாச இருளையும் போக்குகின்றது.

பின்னும் ஒன்று இங்கு நினைவு கொள்ளலாம்; மதியத்தின் பயன் இம்மைக்கு மட்டுந்தான், ஆனால், குறளின் பயன் இருமைக்குமன்றோ உதவும்!

இத்தனைக்கும், மதியம், உயரமாகிய வானத்தில் வேறே ஊர்ந்து வருகிறது; நயனும் பயனும் பெருக இருந்தால், திருக்குறள் போல எங்கிருந்தால்தான் என்ன, எங்குத் தோன்றினால்தான் என்ன!

வள்ளுவர் முப்பால் நூலின் நயனுக்கும் பயனுக்கும் இணை ஏது!

—அக்காரக்கனி நச்சுமனார்

தமிழகத்தில் தோன்றிய திருவள்ளுவர், உலகமே விளங்கும்படி தமது காலத்தில், ஒரு நற்செயல் செய்து உதவினார்; அதுவும் ஒரே ஒரு செயலாகச் செய்தார்; என்றும் அவியாத நிலையிற் செய்தார். சிறந்த திரு விளக்காய் நின்று அது, உலகுக்கு உதவுகின்றது!

எவரேனும் ஒரு நற்செயல் செய்தால், பொதுவாக அதனை விளக்கேற்றி வைத்ததாகக் கூறுவது நமது நாட்டின் வழக்கம்; கல்வி கற்பித்தாலும், பிழைக்க வழிசெய்தாலும், திருமணம் செய்வித்தாலும் வாழ்க்கைக்கு உதவியாக இப்படி எது செய்தாலும், அதனை விளக்கேற்றி வைத்ததாகக் கூறுவதுண்டு. விளக்கு உலகுக்கு அவ்வளவு மங்கலப் பொருள்!

திருவள்ளுவர் செய்தது திருக்குறள்! இது, ஏனை எல்லாவற்றையும் விட உலகுக்கு மங்களந் தருவ



பெருமை கூறுவதற்கில்லை. உலகிலேயே இலக்கண அழகுகள் நிறைந்தவை, தமிழ் மொழி நூல்களே!

மேலும் நூல்களின் வடிவமாகிய நடையமைப்பு, அதாவது யாப்பமைதி, தமிழில், பொருளிலக்கணத்தை ஒட்டியது. பொருளுக்கேற்ற செய்யுள், செய்யுள் நடை! கருத்துக்களின் இயக்கப்படி, செய்யுட்களின் அசை, சீர், அடிகள் பிறக்கின்றன; கருத்துக்களோடு கலக்கும் உணர்ச்சிகளுக்கு ஏற்றபடி வனப்பு அணி வண்ணங்கள் நிழலாடுகின்றன. நூல்களில் இவ் விருவகையும் குற்றம் இல்லாமலும் குறைவு இல்லாமலும் அமைய வேண்டும்.

பொருளிலக்கணத் திட்டமே இல்லாத பிற மொழிகளில், அத் திட்டத்தோடு ஒட்டிய இச் செய்யுளிலக்கணச் சிறப்புகளெல்லாம் எப்படி இணங்கி விளங்கும்? விளங்காதபோது, சிதறுண்ட நிலையில் வெளிப்படும் அவற்றின் நூல்களெல்லாம், நூல் என்னுந் தகுதியில் எப்படி நிறைவுறும்?

எனவே, தமிழ்க்கு உள்ள இந் நூற் சிறப்பை உலகோர் அறிந்து கொள்வது நல்லது; அறிந்து, தத்தம் மொழிகளிலும் இலக்கண அமைதிகளை உயர்த்திக் கொள்ளலாம்.

தமிழ் நூல்களிலும், எழுத்து சொல் பொருள் என்பனவும், பொருளுக்கேற்றபடி யாப்பும், யாப்பின் அசை சீர் அடிகளும் வனப்பு அணி வண்ணங்களும் இழுக்கின்றியும் வழுக்கின்றியும் எல்லாம்

ஒருங்கு நன்கமைந்தனவாக எல்லாராலும் இயற்ற முடிவதில்லை. தமிழ் மொழியில் அமைப்புகள் நிறைவாயிருந்தாலும், நூலியற்றுவோர் நோக்கும் போக்கும் அவற்றிற் சிற்சிலவே குறிக்கொண்டிருக்கவுங் கூடும். ஆதலால், தமிழ் மொழியிலும், இவ்விலக்கண அழகுகள் நிறைநிலையில் ததும்பித் திகழும் வகையில் எல்லா நூல்களும் உள்ளன என்று கூறுவதற்கில்லை; ஆனல், ஒன்றுகூட இல்லை என்றும் சொல்வதற்கில்லை.

திருவள்ளுவர் இயற்றிய இனிய குறள் வெண்பாக்களில் இவ்வழகுகள் அத்தனையும் நிறைவாக நிழலாடுகின்றன!

அதனுலேதான், திருக்குறள் ஒரு நூல், உலகு முழுவதற்கும் ஓங்கிய ஒரு நூல் என்பது!

மற்று, இன்று இவர் இவ் வெல்லாம் பொருந்த இன்குறள் வெண்பா இயம்பினபடி, உலகத்திலேயே என்று எவர் எவை செய்தனர் கூறுமின்!

—நச்சிமனர்.

உலகத்திலுள்ள நூல்களில் திருவள்ளுவர் உதவிய முப்பால் நூலுக்கு ஒப்புமை சொல்லத்தக்கது எதுவுமில்லை; நயன் வகையிலும் இல்லை, பயன் வகையிலும் இல்லை!

இனி, வான் பொருள்களிற் காணல் கூடுமோ என்றுல், ஞாயிறு பயனுடையதேயாயினும் நயனுடையதாகத் தோற்றவில்லை; நயனும் பயனும் உடையதாகத் திங்கள் தோற்றுமேனும், வள்ளுவர் முப்பாலின் நயத்தின் பயன் அதற்கு இருப்பதாகத் தெரியவில்லை, திங்களிலும் நிறை நிலாவை நினைத்தே இப்படித் தீர்மானிக்கவேண்டியிருக்கிறது.



மதியம் என்னும் நிறை நிலா, கலை நிரம்பியது தான்; ஆனுல், பதினாறு கலைகளே நிரம்பியது; திருக்குறள், அறுபத்துநால் வகைக் கலைகளாலும் நிரம்பித் திகழ்கின்றதே!

மேலும், முழு மதி, காண்பதற்கு இனிதாகத் தான் தெரிகின்றது; ஆனுல், தொலைவிலிருந்து பார்க்கும்போதுதான்; அதுவும், வரம்புடைய புறக் கண்ணுக்குத்தான்; வளர்ச்சியுடைய அகக் கண்ணுக்கன்று; திருக்குறள், ஆராய்ச்சி மிக்க அகக் கண்ணுக்குக் காண இனிதாயிருப்பது! நெருங்கி அணுகி அணுகியும் ஆய்ந்து காணலாம்; அப்படிக் காணக் காண மேன்மேலும் இன்பம் பயப்பது!

இன்னும், திங்கள், கண்ணிறைந்த தண்மை தருவதுதான்; அதாவது, கண்களால் கூசாமற் கண்டு மகிழும் அளவு குளிர்ச்சியாய் இருப்பதுதான் ஆனுல், குளிர்ச்சி தவிர வேறு குணங்கள் இல்லாதது; திருக்குறளோ, ஆய்வாரது அகக் கண்ணின் அகல ஆழங்களுக்கும் பண்புகட்கும் ஏற்றபடியெல்லாம் குணங்கள் பல காட்டி இன்புறுத்துவது, பண்புறுத்துவது!

**அன்பும் அருளும்:**

உயிர்களின் உயர்ந்த வல்லமை அன்பு; அறிவின் கனிந்த நிலை அன்பு; உயிரின் உட்பொருளாக விளங்கும் இறைவனது வல்லமை அருள்!

மனத்தை அறியாமையில் செல்லவிடாது, அறிவின் கனிவில் செல்ல விட்டு அச்சிறப்பால் அன்பை அடைய வேண்டும்; அன்பின் பிழம்பாக வேண்டும்.

நம் சிற்றறிவின் வளர்ச்சி அன்பு வரையிலேதான் செல்லும். இறைவனது பேரறிவின் இயலாகிய அருள், அந்நிலையில் நம்மைத் தாவிக்கொள்ளும். எனவே, பரம் பொருளோடு நாம் சேருங்கால் பேரறிவோடு சிற்றறிவு சேர்ந்தால்—நம்மிடமும் அருள் விளங்கும்.

குழந்தையிடம் கருணை காட்டுகிறோம் என்றால், நம்மிடம் சிறிதாவது திருவருட்கூறு பதிந்திருக்க வேண்டும். ''அருள் என்னும் அன்பீன் குழவி,'' என்கிறார் வள்ளுவர். அன்பே முதிர்ந்து அருளாவதாக இங்கே கருதலாம்! உவமையில் மறை பொருள் இருக்கிறது. அருள் மகவு; அன்பு தாய்; தாய் முதிர்ந்து மகவாக மாறுவதில்லை. வேறான ஒன்றன் தொடர்பினால்தான் தாயாகிறாள்; மகவு தோன்றுகிறது. அதுபோல அன்பே முதிர்ந்து அருளாக மாறுவதில்லை: உயிராற்றலோடு வேறான ஒன்று-இறை ஆற்றல் பொருந்த அருள் பிறக்கிறது. இறைவன் தொடர்பால் அருள் தோன்றுவதையே குறிப்பாக உவமை விளக்குகிறது.

**கண்ணப்பர்:**

அன்பின் உருவமாம் கண்ணப்பர் நிலை நினைவுக்கு வருகிறது. கண்ணப்பர், நாணனுங் காடனும் துணையாக வரக், காட்டுக்குச் சென்றார். நாணன் மலைக் கொழுந்தைக் காட்டுகின்றான்.

**மலைச் சமயம்:**

சைவ சமயம் மலைச் சமயம் பழங் குடிகள் மலை வாணர்களாக இருந்தனர். கதிரவன், மலையில் மறைவதாகச் சொல்லப்படும். காலைக் கதிரவன் கடலில் தோன்றுவான். கதிரவன் உருவம் செம்மை நிறமாகத் தோன்றும்; மலையிலிருப்போர்க்கு அது நன்றாகத் தெரியும், அதனால், 'சேயோன்' என்று அதனை அவர் அழைத்தனர்; கடந்தவன், செம்மை நிறம் உடையவன் என்பன அதன் பொருள்கள். உயர்ந்தோர்—உயர் நாட்டம் உடையோர், கடந்த ஒன்றைக் கடவுளைக் காண்பர். ஓங்கி உயர்ந்த மலையில் வாழ்பவரும் கடவுட் காட்சியைப் பெறுவர். இறைவனுக்கு மலைக் கொழுந்து என்று பெயர். முருகன் மலைகிழவோன் எனப்படுகின்றான். உமையும் மலைமகளே. இதனால், சைவ சமயம் மலைச் சமயமாகும். மற்றவர் கண்டு மலைக்கும் சமயமுமாகும்; உண்மையாக ஆராய்ந்தால் திண்ணமாக மலைப்பர்.

**நல்லாறு:**

வழிபோல உதவும் சமயங்கள் பலவற்றுள்ளும் நல்லாறு இது. ஓர் ஊருக்கு வழிகள் பல இருக்கலாம். அவற்றுள் ஒன்றுதான் நேரானதாக இருக்கும். மற்றவை சுற்றாகவோ இடராகவோதான் இருக்கும். இறைவனைச் சேரும் ஆறு வழிகளிலும் ஒரு சமயந்தான் சிறந்தது. எல்லாம் ஒரு படித்தானவை என்று கருத முடியாது.

கையிலிருக்கும் ஐந்து விரல்களில் ஒவ்வொன்று ஒவ்வொரு தன்மையானது; எல்லா விரல்களையும்சமமாகச்சேர்த்துவைக்க முடியுமா? நாம் வைத்தாலும் அவை இருப்பதில்லை. அதுபோல, சமயங்கள் அனைத்தையும் சமமாகக் கருத முடியாது. ஒன்றைத் தெரிந்து உணர்ந்து கொள்ள வேண்டும். அதுதான் புலமை. அஃதின்றேல் எதிலும் தீர்ப்புக் கூற முடியாது. இருவர் மாறுகோள் ஒரு தலை துணிதல் புலமையின் சிறப்பு. கூந்தலை அவிழ்த்து விட்டால் அதில் ஒரு தலைமயிர்தான் மற்றெல்லாவற்றிலும் நீளமாய் இருக்கும்; சோலையிலிருக்கும் மரங்களில் ஒன்றுதான் மற்றவைகளை விட அணுவேனும் உயரமாக இருக்கும். இயற்கைதான் இப்படியென்றால், செயற்கையிலேயும் ஒன்றைப் போல் ஒன்று இராது; ஒன்றைப் போலவே செய்யப்படுவதிலும் அணுவேனும் வேறுபாடு உண்டு.

எனவே, சேக்கிழார் போன்றார் அப்பரடிகளைப் பற்றிக் கூறும்போது, ''நல்லாறு தெரிந்துணர நம்பர் அருளாமையினால்'' என்பதனால், சைவ சமயமே சிறந்ததென்று கூறுவது சமயப் பற்றினாலோ பேத நினைவினாலோ அன்று.

**சமயக் கடமை:**

தன்னிகரில்லாத சைவ சமயம் இன்று சிறப்பாகத்திகழவில்லை. காரணம் சைவத்தின் பிள்ளைகள் சரியில்லை. அதனால், அது உலக மதமாகாமல் இருக்கிறது. சைவமதம் உலக மதமாவதற்குத் திறமான முயற்சி மேற்கொண்டு செயல் புரிய வேண்டும். சைவ சாத்திரங்களைப் பலர் குழப்பிக் கலக்கி விட்டார்கள். யார்யாரோ வந்து அறிவு சொல்லுகிறார்கள், சைவர் எதற்கும் தலையாட்டுகின்றனர். அவர்களுக்குப் போதிய சாத்திர ஆராய்ச்சியும் நேர்முக உணர்வும் இல்லை அதற்கான பயிற்சிக் கழகங்கள் காண வேண்டும். சபைகள் சங்கங்கள் என்பன, அப் பணிகட்கு உரியனவே. அக் கழகங்களில் பயிற்சி பெற்று, நல்ல தெளிவில் ஆலயங்களில்அனுபவப் பட வேண்டும். அத்தகைய அனுபவத்தில் பெறற்பாலன அன்பு அருள் அறம் என்பன.

**அன்பு பிழம்பு:**

கண்ணப்பர் மலை உச்சியை அடைந்தார். ஓங்கிய மலைச் சமயத்தைச் சேர்ந்தார்.

மலை உச்சியிலே குடுமித் தேவர் இருக்கிறார். உச்சியிலிருப்பது எதுவோ அது குடுமி; நம் உச்சியிலிருப்பதும் குடுமி தான்.

அங்கு இரண்டு முறைகளில் வழிபாடு நடந்தது. ஒன்று வேதாகம முறை; அதாவது யந்திர மந்திர சாத்திர தோத்திர முறை. மற்றது, அன்பு முறை!

கண்ணப்பர் மலைக்குச் சென்றபோது நாணன் தான் உடன் சென்றான். காடன் கீழேயே தங்கிவிட்டான்.

காடன், தீவினை; மலைக்கு அழைத்துச் சென்று குடுமித் தேவரைக் காட்டிய நாணனே நல்வினை! நல்ல அல்லவற்றிற்கு நாணுபவன் நாணன். வீழ்த்தப் பட்டு இறைவனுக்கு ஊட்டப் பட்ட கருசிறங் கொண்ட பன்றியே மலம்.

மலைக்குச் சென்ற கண்ணப்பர் உலகை மறந்தார். மும்மலத் தாக்கற்ற தனி யான்மாவாகத் திகழ்ந்தார்; மும்மல மற்ற நிலையே அன்பின் பிழம்பாகும்; கண்ணப்பர் அன்புப்பிழம்பாக விளங்கினார்.

**தவமும் ஞானமும்:**

தவம் சரியை, கிரியை, யோகம் என மூவகைத்தாகும். சரியை யாவது நல்ல நடக்கை; கிரியை இறைமுகமான பணி; யோகம் என்பது அருளில் ஒன்றும் இணக்கம்.

ஞானம் இவற்றின் தெளிவு. மனம் அடங்கின் மோனம் ஏற்படும்; மோன நிலை ஞான நிலை! சரியை கிரியை யோகங்களின் பயன் அதாவது தவத்தின் பயன் ஞானம் எனலாம்.

கண்ணப்பர் முன்பே தவமுடையவராக இருந்தார். அதன் பயனாக அன்புடையவராய்த் திகழ்ந்தார். அவர் ஞானச் சிறப்பில் உயர்ந்தவர்.

**ஞான அணுக்கர்:**

மணிவாசகர், 'கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை' எனத் தமது நிலை குறித்து இரங்குகிறார். மணிவாசகர் இறைவனைக் காதலால் நேசிக்கும் சன்மார்க்க நெறி நின்றவர்; அருளைத் தலைவியாகக் கொண்டு திருக்கோவையார் பாடியவர். ஞானத்தில்ஞானம் உடையவர்; அத்தகைய மணிவாசகப் பெருமான் நிலையினும் இறைவனுக்கு அணுக்கராய்க் கண்ணப்பர் திகழ்ந்தார்.

இறைவன் மாணிக்கவாசகரை ஆட்கொண்ட பின், 'இரு' என்று கூறி மறைந்தருளினன்; பல நாள் பிரிந்து வருந்தினர்; கண்ணப்பரோ ஒருநாள் கூடப் பிரியவில்லை; அருகிலேயே இரு என்றும் ஆண்டவன் அவரை இருத்திக் கொண்டனன்.

கண்ணப்பர் மலைமீதேறிக் கடவுளைக் கண்டது கண்டதே; அவர் பெற்றோர் நாகன் தத்தை சென்று அழைத்ததையும் அவர் அறியவில்லை.

ஆகவே, மாணிக்க வாசகர், "கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின் என்னப்பன் என் ஒப்பில் என்னையும் ஆட் கொண்டருளி வண்ணப் பணித் தென்னை வா என்ற வான் கருணைச் சுண்ணப் பொன் நீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ" என்று பாடி உருகினார்.

**அன்புப் பயிற்சி:**

அன்புப் பயிற்சியை அறிவற்ற பொருள்கள் செய்வதில்லை; அறிவுள்ள பொருள்களே செய்யும். சிறிது அறிவுள்ள பொருள் ஆன்மா. ஆன்ம அறிவு சிற்றறிவே. வீடு பேற்று நிலையிலும் கட்டுண்ட காலத்து மறைந்த அறிவே விளக்கம் பெறுவதன்றி, இறைவனது முற்றறிவைப் பெறாது. மறைந்த அறிவு விளங்க, அன்பு சிறக்கும். 'அறிவினில் அருளால் மன்னி' என்பது சித்தியார்; அருள் பிறக்க ஏதுவாகும் அன்பு, அறிவின் கனிவாகும். அன்பைக் குடில் என்றார் இராமலிங்க அடிகள். 'அன்பெனும் குடில் புகும் அரசே' என்பது அவர் திருவாக்கு, சிற்றறிவின் கனிவாகிய அன்பு, பேரறிவின் இயல்பாய அருளை வீடுபேற்றில் துய்க்கும்.

அன்பின் பிழம்பாம் கண்ணப்பர் மலைக்கொழுந்துக்கு மீளா அடிமையானார். அரனை யன்றிப் பிறிதொன்றையும் நினைக்கவில்லை.

—அமிர்தலிங்கம்.

**Phone. 55034 Tel. Enkayam**

**கைத்தறி ஆடைகளில்**

சிறந்தது எங்கள் எலிபெண்ட் கிசான் டிரேட் மார்க்

**பட்டாடைகளுக்கும் நூலாடைகளுக்கும் சிறந்த இடம்**

கருப்பண முதலியார் ஸ்டோர்,
53, கிடங்குத் தெரு. சென்னை 1.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்: தி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம் (அஞ்)